Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **STC 177/2024** |
| Deposition of witness for | :: | **PW. 2** |
| Name | :: | **செந்தில்ராஜ்** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் .**
**03.03.2026**
**முதல் விசாரணை:**

1. நான் இராமனுஜபுரத்தில் குடியிருந்து வருகிறேன். கடந்த 01.06.2024 ம் தேதி இரவு சுமார் 07.30 அல்லது 08.00 மணியளவில் இராமனுஜபுரம் பேருந்து நிறுத்ததில் நின்று நானும், எனது மாமா வெங்கடேசும் பேசி கொண்டிருந்தோம். அப்போது ஊரில் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு இருந்த காரணத்தினால் அனைத்து இடமும் இருட்டாக இருந்தது. திடீரென்று வண்டி கீழே விழும் சத்தம் கேட்டது. இருட்டாக இருந்ததால் முதலில் என்ன நடந்தது என்று எங்களுக்கு தெரியவில்லை. அருகில் சென்று என்னுடைய கைபேசியின் விளக்கு வெளிச்சத்தில் பார்த்தபோது எனது நண்பரான பாண்டீஸ்வரனின் தந்தைக்கு விபத்து நடந்த விவரம் எனக்கு தெரிய வந்தது. உடனே எனது நண்பருக்கு போன் செய்து விவரத்தை நான் கூறினேன்.

2. எனது நண்பரின் அப்பாவான பாண்டிக்கு தலையிலும், வலது கால் ஆகிய பகுதிகளில் அடிபட்டு இருந்தது. பின்னர் 108 ஆம்புலன்சிற்கு தகவல் கொடுக்கப்பட்டது. ஆம்புலன்ஸ் வருவதற்குள் எங்கள் நண்பரின் அண்ணனான முனியசாமி அங்கு வந்துவிட்டார், அவர் தான் ஆம்புலன்சில் விபத்தில் சிக்கிய நபரான பாண்டி உடன்

மருத்துவமனைக்கு சென்றார். ஆஜர் எதிரி தான் விபத்து ஏற்படுத்திய Honda Shine இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்தார். அவருடைய இருசக்கர வாகனத்தில் முகப்பு விளக்கு இல்லை. அதனால் தான் விபத்து ஏற்பட்டது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் முதல் விசாரணையில் கூறிய விவரத்தினை தான் போலீஸ் விசாரணையிலும் கூறினேன் என்றால் சரிதான். விபத்து நடந்ததாக கூறும் சமயத்தில் நானும், எனது மாமா வெங்கடேசும் பேருந்து நிறுத்தத்தில் நின்று பேசி கொண்டிருந்ததாக எனது முதல் விசாரணையில் கூறிய விவரத்தினை நான் போலீஸ் விசாரணையின்போது கூறினேனா என்றால் சாட்சி அவருடைய 161(3) குவிமுச வாக்குமூலத்தை படித்து பார்த்துவிட்டு சொல்லவில்லை என்று கூறுகிறார். நான் சம்பவ இடத்தில் இல்லாத காரணத்தினால் தான் போலீஸ் விசாரணையின்போது நானும், எனது மாமாவும் பேசி கொண்டு இருந்ததாக கூறிய விவரத்தினை கூறவில்லை என்றால் சரியல்ல.

2. விபத்து நடந்தது சம்மந்தமாக நான் எனது நண்பரான பாண்டீஸ்வரனுக்கு மட்டும் தான் தகவல் கொடுத்தேன் என்றால் சரிதான். ஆனால் அசா.1 பாண்டீஸ்வரன் நீதிமன்ற விசாரணையின்போது அவருக்கும், அவரது அண்ணனான முனியசாமிக்கும் தகவல் கொடுத்ததாக கூறியுள்ள காரணத்தினால் நான் எனது நண்பருக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அசா.1 னின் அண்ணன் மட்டும் தான் விபத்து நடந்த இடத்திற்கு வந்ததாக நான் கூறியுள்ளேன் என்றாலும் ஆனால் அசா.1 னின் அம்மா கிருஷ்ணம்மாள் அவருடைய போலீஸ் விசாரணையின்போது அவரது இரண்டு மகன்களுடன் சம்பவ இடத்திற்கு வந்ததாக கூறியுள்ளார் என்றாலும் அதனால் நான் சம்பவ இடத்திலேயே இல்லை என்றாலும் காயம்பட்ட நபர் எனது நண்பரின் தந்தை என்ற காரணத்தினால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் சம்பவ இடத்தில் இருந்தபோது அசா.1 னின் அண்ணன் மட்டும் தான் அங்கு வந்தார், அதன்பிறகு யார் வந்தார்கள் என்று எனக்கு தெரியாது.

3. நான் எனது போலீஸ் விசாரணையின்போது அசா.1 ம், அவருடைய

அண்ணன் முனியசாமியும் சம்பவ இடத்திற்கு வந்ததாக எனது போலீஸ் விசாரணையின்போது கூறியுள்ளேன் என்றாலும் தற்போது முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியாக எனக்கு ஞாபகம் இல்லை. நான் எனது முதல் விசாரணையில் எதிரியின் இருசக்கர வாகனத்தில் முகப்பு விளக்க இல்லை என்று கூறிய விவரத்தினை எனது போலீஸ் விசாரணையின்போது கூறவில்லை என்றாலும் தற்போது வழக்கிற்காக மேற்படி விவரத்தினை மிகைப்படுத்தி கூறுகிறேன் என்றாலும் சரியல்ல, நான் போலீசார் விசாரணையின் போது மேற்படி விவரத்தினை கூறினேன் என்று தான் நினைக்கிறேன். உண்மையில் என்னை போலீசார் விசாரணை செய்திருந்தால் மேற்படி விவரத்தினை கூறியிருப்பேன் என்றாலும் மேற்படி விவரத்தினை கூறாத காரணத்தினால் போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. எங்கு வைத்து போலீசார் என்னை விசாரணை செய்தார்கள் என்றால் அருப்புக்கோட்டையில் உள்ள பழனிவேல்ராஜன் மருத்துவமனையில் வைத்து போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**மறுவிசாரணை**

**இல்லை**